1982 பிப்ரவரி 8]

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்தக் கரும் பாறையினை அறுத்து பாலிஷ் செய்கின்ற தொழிற்சாலையைச் சென்னையில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே மிக அதிக அளவிலே கரும்பாறை தர்மபுரி மாவட்டத்தில்தான் இருக்கின்றது. அங்கிருந்துதான் அதிக அள விலே ஏற்றுமதியாகின்றது. ஆகவே தர்மபுரி மாவட்டத்திலே இந்தத் தொழிற்சாலையினை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இந்தக் கல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கின்றது. மேலும் துறைமுகத்திலிருந்துதான் இக்கல்லை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். ஆகவே பாலிஷ் செய்த கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வசதியாக பாலிஷ் செய்கின்ற தொழிற் சாலையும் துறைமுகத்தின் அருகிலேயே இருந்தால் நன்மை பயக் கும். ஆகவே அனைத்துக் கற்களையும் இங்கே கொண்டு வந்து பாலிஷ் செய்து அனுப்புகின்ற வகையிலே சென்னை துறைமுகத் திற்குப் பக்கத்திலே இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) வினாக்கள் அனுமதிக்கப் பெறுவது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, என்னுடைய கேள்வியினை அனு மதிக்க மாட்டேன் என்கிறீர்கள். பல கேள்வியினை நான் எழுதி அனுப்பி இருக்கிறேன். கேள்வி கேட்பதற்கு என்னைத் தாங்கள் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். உங் களுக்கு வேண்டியவர்களை மட்டும்தான் அனுமதிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்மீது குற்றச்சாட்டு கூறப்பட்டதற்கு நன்றி. எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் ஒரு கேள்வி கேட்க அனுமதி கொடுக்கப்பட்டு வருகின்றது. கேள்வி நேரமும் ஒன்றரை மணி நேரம் நடத்தப்படுகின்றது. 10 மணிக்கு முடிய வேண்டும் என்றால் $10\frac{1}{2}$ மணி வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகின்றது. தாங்கள் சற்று அசதியாக இருப்ப தால் தனிப்பட்ட முறையிலே தங்களுக்குக் கேள்வி கேட்க அனுமதி அளித்தேன். ஆனால் எல்லாக்கேள்விகளையும் தாங்களே

கேட்க வேண்டும் என்றால் முடியாது. நீங்களே கேள்விகளை எழுதி அனுப்பினால் உங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கு உரிமை உண்டு. ஆனால் எல்லா துணைக் கேள்விகளையும் எனக்கே கொடுங்கள் என்றால் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கை வலிக்கும் வரை தூங்கிக் கொண்டிருக்கிறேன். என்னைத் தாங்கள் அழைப்பதே இல்லை. கேள்வகள் ஏதோ அனுமதித்ததாகச் சொன்னீர்களே, என் கேள்விகள் வரவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு நாளும் இத்தனை கேள்விகள் என்று அனுமதிக்கப்படுகின்ற கேள்விகள் தான வரும். உங்கள் கேள்விகள் வரும்போது, உங்களுக்கு இரண்டு உப கேள்விகள் கேட்க வாய்ப்பளிக்கப்படும்.

(ஆ) பேரவைத் தலைவரை அழைக்கும் முறை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் தங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக "ஹலோ, ஹலோ" என்று கூப்பிடுகிறார்களே, அதைப் போன்று தங்களை அழைக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு என்னை அழைத்தது எனக்குக் கேட்கவில்லை. அப்படி அழைத்திருப்பார்களேயானால் அது தவிர்க்கப்பட வேண்டும். சபையில் அவ்வாறு கூப்பிடுவது கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சிக்கு நம் இரண்டு பேருக்குமிடையே வம்பை வளர்த்துவிடுவதுதான் நோக்கம் போலுள்ளது. உங்களது கவனத்தைத் திசை திருப்பிவிட வேண்டும் என்றே சொல்கிறார்கள். அதற்காக அம்பிகாபதியை வம்புக்கிழுப்பது சரியல்ல.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரை அப்படி அழைப்பது முறையானதல்ல என்று கருதியதால்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு போனில் பேசுவதுபோல் அழைப்பது கூடாது. நான் திரு. அம்பிகாபதிக்கு என்று இதை சொல்லவில்லை. பொதுவாக இத்தகைய முறைகளை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.